Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 மார்ச் (24 - 03 - 1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 34

## மாணவர் முத்திரை நிதி முழுவதும் ஒதுக்க மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான உணவு முத்திரைக்கான முழுமையான நிதி ஒதுக்கீட்டிற்கு திறைசேரி மறுப்புத் தெரிவித்துள்ளது. இம் மாவட்டத்தின் பாடசாலைகளுக்கான மாணவர் மதிய உணவு முத்திரைகளுக்கான கொடுப்பனவுகளுக்குச் சுமார் 13.67 மில்லியன் பணம் தேவைப்படுகின்றது. இந்த முழுத் தொகை நிதியையும் ஒதுக்கீ (4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மாவட்டத்திற்கு வெளியில் மண்ணெய் விற்பதை உடன் நிறுத்துக

## கூ. சங்கங்களுக்கு அரச அதிபர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு எடுத்துவரப்படும் மண்ணெண்ணெயை இலாப நோக்கிற்காக மாவட்டத்திற்கு வெளியில் விற்பனை செய்வதை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உடனடியாக நிறுத்தவேண்டும் என்று அரசாங்க அதிபர் திரு அன்ரன் அல்பிரட் அறிவித்துள்ளார்.

இம்மாவட்டத்திற்கு மண்ணெண்ணெயை எடுத்துவருவதற்கான அரசாங்க அதிபரின் அனுமதிப்பத்திரத்தைப் பெற்று கொண்ட சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மண்ணெண்ணெயை எடுத்துவந்து வரும்வழியில் மாவட்டத்திற்கு வெளியே விற்பனை செய்து வருகின்றன. இதனால் மாவட்டத்தில் நிலவும் எரிபொருள் (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி தாக்கி ஒருவர் படுகாயம்

(கோப்பாய்)

கோப்பாய், உரும்பராய் ஆகிய பகுதிகளில் சிறிலங்கா விமானப்படையின் ஹெலிகொப்டர் ஒன்று பரவலாக சுவிபர் தாக்குதல் நடாத்தியதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று மாலை ஐந்து மணி (4ஆம் பக்கம் பார்க்க)

## எட்டு மாவீரர்களுக்கு நேற்று மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மன்னார் தொக்குப்பகுதியான், இலாவத்துறை சிறிலங்கா இராணுவ முகாம்கள் மீதான தாக்குதலில் வீரமரணமடைந்த எட்டுப் போராளிகளின் புகழுடல்கள் நேற்று மாலை அன்னாகம் சந்தைப் பகுதியில் பொது மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

பெருந்தொகையான பொது மக்களும், மாணவர்களும் வீரமரணமடைந்த வீரவேங்கைகளுக்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். பின்னர் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த (4ஆம் பக்கம் பார்க்க)

## கல்வி; சமுதாயத்தின் நலனுக்கும் மேம்பாட்டிற்கும் பயன்பட வேண்டும்

### — ஆஞ்சநேயர்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்கள் சம்பளத்திற்காகவும், மாணவர்கள் பரீட்சைக்காகவும் மட்டுமே கல்வியை மேற்கொள்ளாது சமுதாய நலனுக்காகவும், சமுதாய மேம்பாட்டிற்காகவும் அக்கல்வியைப் பயன்படுத்த முன்வரவேண்டும்.

இவ்வாறு நேற்று மாலை யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டுரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்டப் பிரசாரப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் குறிப்பிட்டார்.

வைத்தீஸ்வராக்கல்லூரியின் பழைய மாணவர்களான சாம்சன் (செல்வநாயகம் செல்வச்சந்திரன்), இளம்புலி சாம்சன் (செல்லப்பா குலேந்திரன்) மற்றும் வீரமரணமடைந்த ஏனைய போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தும் முகமாக நடைபெற்ற இவ்வஞ்சலிக் (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் மோதல்; இராணுவம் ஷெல் தாக்கு

(ஆனையிறவு)

நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து பரந்தன் பக்கமாக கடும் ஷெல் தாக்குதல்களும், கலிபர் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இதனைத்தொடர்ந்து விடுதலைப் புலிகள், முகாமை நோக்கி ''அருள் 89'' தாக்கு (4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்துடன் ரெலோவும் இணைந்து

## மட்டக்களப்பில் தமிழர் கைது தாக்குதல் தொடர்கிறது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பல பகுதிகளிலும் சிறிலங்கா இராணுவத்தினருடன் ரெலோ குழுவினரும் இணைந்து தேடுதல் நடாத்துவதும் அப்பாவிப் பொது மக்களை கைது செய்வதும் தொடர்கின்றது.

கடந்த 19 ஆம் திகதி மகிழூர் என்ற கிராமத்தைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தி (4 ஆம் பக்கம் பார்க்க)

## நிலாவெளியில் 5 தமிழர் இராணுவத்தால் கைது

(திருக்கோணமலை)

நிலாவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் தேடுதல் நடாத்தி ஐந்து அப்பாவிப் பொதுமக்களை கைது செய்துள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி இந்தப் பகுதியில் உள்ள கடற்கரை விடுதியொன்றில் வேலை செய்து கொண்டிருந்த மேற்படி ஐந்துபேரையும் இராணுவத்தினர் கைதுசெய்து முகாமுக்கு கொண்டு சென்றனர். இவர்கள் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை.

## தமிழீழ மீட்பு நிதி செலுத்த நல்லூர்ப் பகுதியில் ஏற்பாடு

தமிழீழ மீட்புநிதி செலுத்த ஒப்புதலளித்த நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தோர் பங்களிப்புச்செய்வதற்கு வசதியாக 25-03-91 திங்கட்கிழமை பி.ப. 2மணி தொடக்கம் மாலை 4 மணி வரை மீட்பு நிதி பெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என விடுதலைப் புலிகளின் நிதிப்பொறுப்பாளரின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

மேலும் அச் செய்திக் குறிப்பில்: (4 ஆம் பக்கம் பார்க்க)

## புனர் நிர்மாணப் பிரிவுக்கு நிதி ஒதுக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக புனர்வாழ்வு பிரிவுக்கு மேலும் நிதி ஒதுக்கீடு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க அதிபரும் செயலக பிரதம கணக்காளரும் கொழும்பு புனர்வாழ்வுப் பிரிவின் தலைமை அலுவலக அதிகாரிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தையின்போது மேலதிக நிதி ஒதுக்கீடு செய்யும்படி கோரப்பட்டதாக யாழ். பிரதம கணக்காளர் தெரிவித்தார். (4 ஆம் பக்கம் பார்க்க)

## சுய விருப்பில் இளைப்பாறிய ஆசிரியருக்கு ஒய்வூதியக் கொடுப்பனவு இதுவரை கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி நிர்வாகப் பிராந்தியத்தில் சுய விருப்பத்தின் பேரில் ஓய்வூதியத்துக்கு விண்ணப்பித்த ஆசிரியர்கள், மற்றும் கல்வித் திணைக்கள ஊழியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் இதுவரை கைக்கெட்டவில்லை. ஓய்வூதிய விண்ணப்பப்படிவங்களை ஊழியரின் சுயவிபரக் கோவையுடன் ஒப்பு நோக்கிப் படிவங்களை உரிய இடத்துக்கு இதுவரை அனுப்பாதது என்றிக் தத் தாமதத்துக்கான காரணமாகும். இதே வேளை, இளைப்பாறுவதற்கு விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பத்தை அங்கீகரித்துக் கூட இதுவரை உரிய முறைப்படியான கடிதங்கள் அனுப்பி வைக்கப்படவில்லையாம்.

## நயினாதீவில் இருந்து புங்குடுதீவுமீது ஷெல்தாக்கு

(புங்குடுதீவு)

நயினாதீவில் உள்ள ஸ்ரீலங்கா கடற்படை முகாமில் இருந்து புங்குடுதீவுப்பகுதியை நோக்கி நடாத்தப்படும் எறிகணைத் தாக்குதல் கடந்த மூன்று தினங்களாக தீவிரமடைந்துள்ளது. பத்தொன்பதாம் திகதி இரவும், இருபதாம் திகதி காலை, இரவு நேரங்களிலும், இருபத்தோராம் திகதி முழுநாளும் விட்டு விட்டு மேற்படி எறிகணைத் தாக்குதல் (4 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவுப் பயணி மீது கடற்படை பலத்த தாக்குதல்

(புங்குடுதீவு)

குறிகட்டுவான் துறையில் இருந்து நெடுந்தீவுக்குச் சென்ற பயணிகள் படகை நயினாதீவில் சோதனையிட்ட ஸ்ரீலங்கா கடற்படையினர் அதில் சென்ற இளைஞர் ஒருவரை கைது செய்து கடுமையாகத் தாக்கியுள்ளனர். கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம் பெற்ற இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

மேற்படி படகில் சென்ற பயணிகள் அனைவரையும் படையினர் சோதனையிட்ட பின்னர் நெடுந்தீவைச்சேர்ந்த (4 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளுக்கு இன்னும் கால அவகாசம் உள்ளது

### - பிரேமதாஸா

(கண்டி)

ஜனநாயக வழிமுறைகளில் நம்பிக்கைவைத்து தேசிய நீரோட்டத்தில் கலந்துகொள்வதற்கு விடுதலைப்புலிகளுக்கு இன்னமும் அவகாசம் இருக்கிறது; எனவே அவர்கள் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு பேச்சுவார்த்தை நடத்தவும், தேர்தல்களில் கலந்துகொள்ளவும் முன்வரவேண்டும். (4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### கொழும்பு ஸ்ருடியோ

புளொக் (Block) புகைப்படம், றபர்சீல், கலர்படம், ஓவியம் பிரேம்போடுதல், கலர் பிலிம், சுருள்கள், ஸ்ரிக்கேஸ் முதலியனவற்றிற்கு நாடுங்கள்: கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். (B/2090)

### SLEAS

SLEAS- பரீட்சைக்குரிய நுண்ணறிவு, பொது உளச்சார்பு, இரசித்தல் நூல்கள் எல்லாப்பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆசிரியோன்: க. குணராசா எம். ஏ. (R-1204)

### தேவை

பாவித்த சம்போ, ஓடிக்கலோன், Gum (கம்), Vicks போத்தல், பவுடர் டப்பா போல் பொயின்ட் பேனா. சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9-00 மணிமுதல் 12-00 மணி வரை வாங்கப்படும்: எஸ். சத்தியன், 55, மணிக்கூட்டு வீதி, கொழும்பு ஸ்ருடியோ பின்புறம், யாழ்ப்பாணம். (B 2169)

### விற்பனைக்கு

கறுப்பு வெள்ளை கலந்த புதிய நிறங்களில் அழகான பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. விலாசம்: 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (R-1205)

### அனுப்பி வைக்கவும்

21.3.91இல், தவறவிட்ட அடையாள அட்டையை அனுப்பியவர் தயவு செய்து இரு பிறப்பு, ஆவணங்களையும் ஈழநாதம் காரியாலத்திற்கு அனுப்பவும். (R-1206)

## பாரதிதாசன் நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ் மன்றம் நடாத்தும்பாரதிதாசன் நூற்றாண்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெற உள்ளது.

க. இரகுபரன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவின் நிகழ்ச்சிகளாக இசையரங்கு ஆய்வுரை, கவியரங்கு, மற்றும் பட்டிமண்டபம் ஆகியன நடைபெறவுள்ளன.

பாரதிதாசன் பாடல்களில் மேலோங்கி நிற்பது 'மொழி உணர்வா சமுதாய உணர்வா' என்ற தலைப்பில் பட்டிமண்டபமும் நடைபெறும். நடுவராக இ. ஜெயராஜ் கலந்து கொள்கிறார்.

## தொடர்ந்து ஷெல் தாக்குதல்

(வவுனியா)

வவுனியாவில் மருக்காரம்பலை என்னும் இடத்தை நோக்கி தொடர்ந்து ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் பல மாடுகள் இறந்துள்ளன. (தி)

## கப்பலில் செல்லும் நோயாளர் பதிவு செய்யவும்

(கொழும்புத்துறை)

கப்பலில் கொழும்பு செல்ல விரும்பும் சகல நோயாளர்களும் யாழ். போதனா வைத்தியசாலையில் 28 ஆம் திகதி (28-3-91) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்குப் பிறகும், 29 ஆம் திகதி (29-3-91) வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை வைத்தியசாலைப் பணிப்பாளர் காரியாலயத்திற்கு நேரில் வந்து தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளும்படி பணிப்பாளர் செல்வி புஸ்பா - சண்முகம் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பெயர்களைப் பதிவு செய்த நோயாளர்கள் அனைவரும் தமது பெயர்களைத் திரும்பவும் பதிவு செய்து கொள்ளும்படி அவர் கோரியுள்ளார். (24)

சுகாதார உதவியாளராக

## HEALTH VISITORS

## பயிலுநர்கள் தெரிவு-1991

சுகாதார உதவியாளராகப் பயிற்சியளிப்பதற்கு கீழ்க்காணும் தகுதியுள்ள ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பதவி தற்காலிகமானது. நிரந்தர பதவிகளுக்கு உரித்துடையவராகமாட்டார்கள். மாதாந்தம் ரூபா. 2000/- அலவன்சாக வழங்கப்படும்; வேறுபடிகள் வழங்கப்படமாட்டா.

தகைமைகள்;-

1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. வயதெல்லை -18வரு - 40வருடம்
3. கல்வித்தகைமை:

(அ) கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் (பழையது) 6 பாடங்களில் சித்தி (இரண்டு தடவைகளில் இவற்றுள் தாய்மொழி / தமிழ் இலக்கியம், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியும் அத்துடன் இரசாயனம், பௌதிகம், உயிரியல், விலங்கியல், தாவரவியல் இவற்றுள் ஏதாவது இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) க. பொ. த (சாதாரண தர)ப் பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) 6 பாடங்களில் சித்தி (இரண்டு தடவைகளில்) இவற்றுள் தாய்மொழி / தமிழ் இலக்கியம் கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியும், இவற்றுடன் இரண்டு விஞ்ஞான பாடங்களிலும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.


(இ) தேசிய கல்வித் தராதரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி. (இரு தடவைகளில்) இவற்றுள் தாய்மொழி / தமிழ் இலக்கியம் கணிதம் ஆகியவற்றுடன் இரண்டு விஞ்ஞானபாடங்களிலும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

கல்விப் பொது உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்தோரும் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும். தகுதியுடையோர் தங்கள் விண்ணப்பங்களைத் தாமே தயாரித்து 9.4.91 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ கிடைக்கத்தக்கதாக இப்பணிமனைக்கு அனுப்பி வைக்கவும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த யாவரும் இப் பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

டாக்டர் நா. கனகசபை
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம். (B-2178)

## 4ஆம் வருட வீர அஞ்சலி



வீரஜனனம்
11-03-1964

வீரமரணம்
24-03-1987

### வீரவேங்கை அல்போன்ஸ்

(தெய்வேந்திரன் செல்வச்சந்திரன்

இருபத்தைந்தாம் அகவையைக் கடந்த
ஈரைந்து நாளில்
தாயக மீட்பில் உன்
உயிர் தந்தாய்! - உன்
பாதங்களுக்கு தலைவணங்கினோம்.

பெற்றோர், சகோதரர், உறவினர், நண்பர்கள்.

82/32 செல்வச்சந்திரன் வீதி,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம். (R-1183)




## மார்ச் 24

1985ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

✱ **வண்டன்** (ப. சண்முகநாதன் - சம்பூர்)

1987ஆம் ஆண்டு எதிர்பாராத விபத்து காரணமாக எமைப்பிரிந்த

**அல்போன்ஸ்** (தெய்வேந்திரன் செல்வச்சந்திரன் - நல்லூர்)

**நாகு** (இளவாலை)

1989ஆம் ஆண்டு கிளாலியில் இந்திய இராணுவத்தினரின் சுற்றி வளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

**றோம்** (இன்னத்துரை கோணேஸ்வரன் - சாவகச்சேரி)

இதே ஆண்டு இந்திய இராணுவத்தினருடனான மோதலில் காயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது தேசத்துரோகிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட

**டில்லிகணேஸ்** (நுணாவில் - சாவகச்சேரி)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

✱ மேற்குறிப்பிட்டிருக்கும் மாவீரர் வண்டன் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B-2185)

## சாயி அக்குபங்சர் சிகிச்சை நிலையம்

★ வாதம்
★ ஆஸ்த்மா
★ மூட்டுக்காய்ச்சல்
★ நீண்டநாள் மனநோய்கள்

மற்றும்

மாற்றமுடியாது எனக் கணிக்கப்பட்ட நீண்டநாட்கள் கொண்ட எந்தவகையான நோய்களாக இருந்தாலும்

"வர்மானிய அலகு முறைச் சிகிச்சை"

எனப்படும் தமிழ் அக்குபங்சர் சிகிச்சை மூலம் சிகிச்சையளிக்கப்படும்.

**வைத்திய கலாநிதி V. P. சுந்தரராஜன்**

(விசேட அக்குபங்சர் சிகிச்சை நிபுணர்)

இல: 10 பருத்தித்துறை வீதி, யாழ்நகர்.

குறிப்பு: முழுக்க முழுக்க தமிழ் முறையிலும், அதி நவீனமுறையிலும் சிகிச்சை அளிக்கப்படும். (B- 2129)

## ❋ சிந்தனைக்கு ❋

கண்கூடாக உள்ள நிகழ்வுகளைக் காட்டிலும், நீடித்து நிற்பவை, பழைய ஞாபகங்கள்:

— ஜீன் பவுல் ரிடிட்டர்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 24-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## மாவட்ட சபையில் இருந்து உள்ளூராட்சி வரை

கொழும்பு மாநகரசபை தேர்தலில் போட்டியிட உள்ள ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளருக்கான தேர்தலில் பெருந் தில்லுமுல்லுகள் இடம்பெற்றுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதை உறுதிப் படுத்துமாப்போல் ஆளும் கட்சி முக்கிய அரசியல்வாதி ஒருவர் தனது மகன் வேட்பாளர் பட்டியலில் தெரிவு செய்யப்படாமைக்குத் தேர்தல் மோசடியே காரணம் எனத் தெரிவித்துள்ளார்.

வேட்பாளர் தெரிவுக்கான தேர்தலில் வாக்குப் பெட்டிகள் தேர்தல் நடந்த இடத்தில் இருந்து நேரடியாக வாக்குகள எண்ணும் இடத்திற்குக் கொண்டு செல்லப்படாமல், வேறு இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு கள்ள வாக்குகள் போடப் பட்டதாகவும், கள்ள வாக்குகள் போடும்போது பென்சிலுககுப் பதில் போல்பொயின்ற் பேனாக்கள் பாவிக்கபபட்டதாகவும், சில வாக்குப் பெட்டிகளில் நான்கு ஐந்து வாக்குகள் ஒன்றாக மடிக்கப்பட்டுப் போடப்பட்டதாகவும் தேர்தல் தில்லுமுல்லுகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

இத் தேர்தல் தில்லுமுல்லுகள் பற்றி கொழும்பு மாவட்ட ஐ. தே. கட்சி அமைப்பாளரான கல்வி அமைச்சர் லலித்அத்துலத்முதலியிடம் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

மேலே தெரிவிக்கப்பட்ட தேர்தல் மோசடி முதல் முறையாக ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் தெரிவில் அறிமுகப்படுத்தப்பட்டதொன்றல்ல. 1981ஆம் ஆண்டு நடந்த முதலாவது மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தலிலேயே இவ்வாறான மோசடிகள் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டன. இத் தேர்தலின்போது நான்கு ஐந்து வாக்குச் சீட்டுகளே ஒன்றாக மடித்துப் போடப்பட்டன. ஆனால் மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தலின்போது வாக்குச் சீட்டுகள் தனித்தனியாகக் கழற்றப்படாமல் ''பின்பண்ணிய'' படியே வாக்குப் பெட்டிக்குள் கற்றை கற்றையாகப் போடப்பட்டன அன்றும் வாக்குகள் எண்ணப்படுவதற்காக செயலகத்திற்கு கொண்டு செல்லப்படவேண்டிய பெட்டிகள் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து பின்னர் செயலகம் கொண்டு செல்லப்பட்டது.

இத் தேர்தல் மோசடியை அன்று வடக்கில் நடத்துவதற்கென யாழ் வந்தவர்கள் அன்றைய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் லலித் அத்துலத் முதலியும், காணி, காணிஅபிவிருத்தி மகாவலி அமைச்சர் காமினி திஸநாயக்காவும், கைத்தொழில் தொழில்துறை அமைச்சர் சிறில்மத்தியூவுமாகும். இந்நிலையில் தேர்தல் மோசடி பற்றி லலித்அத்துலத்முதலியிடம் முறையீடு செய்யப்பட்டிருப்பது கள்வனிடமே நீதிகேட்பதற்கு ஒப்பானதாகும்.

சிறிலங்காவில் ஜனநாயக நாட்டிற்குரிய தேர்தல் முறைமை மறைந்து ஒரு தசாப்தமாகின்றது. இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியே பொறுப்பு. ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் வெற்றியைத் தீர்மானிப்பதற்காக தேர்தல் அமைப்பு முறைகளையும், ஜனநாயக விரோத செயற்பாடுகளையும் கடந்த 14 வருட ஆட்சியில் செயற்படுத்தியுள்ளது.

1982 இல் நடந்த பாராளுமன்றத்தின் ஆட்சிக் காலத்தை நீடிப்பதற்கான கருத்துக்கணிப்பு, 1988 ஜனாதிபதித் தேர்தல், 1989 பாராளுமன்றத் தேர்தல் யாவும் ஜனநாயகத் தேர்தல் ஒழுங்கு விதிகளுக்கு மாறாக நடந்தவையாகும். இந்தத் தேர்தல்கள் ஜனநாயகத் தேர்தல் பாரம்பரியங்களை கேலிக்குரியதாக்கி விட்டன.

இந்நிலையில், ஆளும்கட்சி வேட்பாளர் தெரிவிலேயே தேர்தல் மோசடி இடம்பெறுமானால், உள்ளூராட்சித் தேர்தலில் எந்த வீச்சில் நடைபெறும் என்பதை எண்ணிப் பார்க்கத் தேவையில்லை.

ஆனால், தேர்தலில் மோசடி நடைபெறாமல் இருக்க சார்க் அமைப்பு நாடுகளின் கண்காணிப்புக் குழுவை அழைக்கப் போவதாக சிறிலங்கா ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஆனால் 1988 ஆம் ஆண்டுத் தேர்தலின்போதும் 1989 ஆம் ஆண்டுத் தேர்தலின் போதும் கண்காணிப்புக்குழு அழைக்கப்பட்டு இருந்தது. ஆனால் தேர்தல் மோசடி நிறுத்தப்பட்டதாகவோ, தடுக்கப்பட்டதாகவோ இல்லை. அது தொடர்ந்து இடம்பெற்றே வந்துள்ளது.

## தேர்தல் உடன்பாடு குறித்து
# ஜனதா தள (எஸ்) முதலமைச்சர்கள் காங்கிரஸ் பேச்சுவார்த்தை

(டில்லி)

உத்தரப்பிரதேச முதலமைச்சர் முலாயம் சிங் யாதவ் உடனும், குஜராத் முதல்வர் சிமன் பாய் பட்டேல் உடனும் தேர்தல் உடன்பாடு காண்பதற்கான பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தி ஒரிசா செல்லும் வழியில் விமான நிலையத்தில் செய்தியாளரிடம் பேசும் போது கூறியுள்ளார். இந்தப் பணிக்கென முன்னாள் வெளியுறவு அமைச்சரும், இந்திரா காங்கிரஸ் மூத்த உறுப்பினருமான பி.வி.நரசிம்மராவ் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

அதே வேளை ஜனதா தள (எஸ்)கட்சி முதலமைச்சர்கள் எவருக்கும் தேர்தல் உடன்பாடு பற்றி எவருடனும் பேசுவதற்கு அதிகாரம் இல்லை என பிரதமர் சந்திரசேகர் அறிவித்துள்ளார்

இதற்கிடையில் ஹரியானா மாநிலத்தின் முதல்வராக மீண்டும் ஓம் பிரகாஷ் சௌதாலா பொறுப்பு ஏற்றுள்ளார். சட்டப் பேரவை உறுப்பினர்களில் ஜனதா தள் (எஸ்) சேர்ந்த 33 பேரும் சுயேட்சை உறுப்பினர் நால்வரும் சௌதாலாவை ஆதரித்தனர். சௌதாலாவின் பதவியேற்பைக் கண்டித்து மாநில அமைச்சரவையைச் சேர்ந்த மூவர் அமைச்சரவைப் பதவியையும், சட்டப் பேரவை உறுப்பினர் பதவியையும் ராஜினாமாச் செய்வதாக அறிவித்துள்ளனர்.

## வவுனியா தெற்கு சங்கக் கிளைகள்
# தொடர்ந்து மூடப்பட்டுள்ளதால் மக்கள் பெரும் அவதி

(வவுனியா)

வவுனியா தெற்கு தமிழ் உதவி அரசாங்க அதிபர் பகுதிக்குட்பட்ட கூட்டுறவுச் சங்கக் கிளைகள் சில தொடர்ந்து மூடப்பட்டிருப்பதால் அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் அத்தியாவசியப் பொருள்கள் கொள்வனவு செய்வதில் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

சமீபத்திய அரச படையினரின் தாக்குதல் நடவடிக்கைகளை அடுத்து தாண்டிக்குளம் சமயபுரம். புதுக்குளம் ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கக் கிளைகளே செயற்படாமல் உள்ளன.

மேற்படி கிளைகளில் பணிபுரியும் ஊழியர்கள் இராணுவ அச்சம் காரணமாக வேலைக்குச் செல்ல முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(தி)

## அமரர் இராசலிங்கத்திற்கு தெ. ப. கூ. சங்கம் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

அமரர் த. இராசலிங்கம் பனம் தொழில் வல்லுனர்களின்வாழ் வைவளமாக்கத்தனது சேவைக்காலத்தில் ஆற்றிய அளப்பரிய பணிகளை நாம் நினைவில் கொள்வோம். இவ்வாறு வடமாகாணதெ. ப. கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்) முன்னை நாள் பாராளுமன்ற உறுப்பினர் த. இராசலிங்கம் அவர்கள் மறைவு தொடர்பாக வெளியிட்ட அஞ்சலிச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

அவரது பொருளாதார வழிகாட்டலில் தொடர்ந்து செல்வோம் என்றும் செய்திமேலும் கூறுகிறது.

## வவுனியா மாவட்டத்தில் மண்ணெய் விலை திடீர் வீழ்ச்சி

(வவுனியா)

வவுனியாவில் மண்ணெய் விலை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளது. நகரப்பகுதியிலிருந்து பல லொறிகளில் ஏராளமான மண்ணெய் பரல்கள் விற்பனைக்காக பேயாடி கூழாக்குளம் சந்தைப் பகுதியில் வந்து குவிவதைக் காணக்கூடியதாக உள்ளது.

வவுனியாவில் மண்ணெய் விலையின் வீழ்ச்சியை அடுத்து யாழ்; குடா பகுதியில் மண்ணெய்க்கு நிலவும் தட்டுப்பாடு நீங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

(தி)

## இந்துக் கோயிலில் பௌத்த போதி பூஜா...?

(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனை வரதராஜ பிள்ளையார் கோவிலினுள் பௌத்த சமயச்சடங்கான போதிபூஜா நிகழ்த்தப்பட்டது. மகா சிவராத்திரியின் போதே போதி பூஜா நிகழ்த்தப்பட்டது. ரூபவாஹினி தமிழ், ஆங்கில, சிங்கள செய்திச் சேவையில் இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பாகியது.

கொழும்பில் இது பற்றிப் பலவாறு பேசப்படுகிறது. சிங்கள பௌத்தர்கள் போதி பூஜா நிகழ்த்த இந்து ஆலயத்தை ஏன் தெரிவு செய்தார்கள் என்றும், அதற்கு எப்படி ஆலய நிர்வாகம் அனுமதி வழங்கியது என்றும் கேட்கப்படுகிறது. மகா சிவராத்திரிக்கும் போதி பூஜாவுக்கும் என்ன தொடர்பு என்றும் அடியார் தரப்பில் கேட்கப்படுகிறது.

## சிறுதானியச் செய்கை 65 வீதம் வெற்றியளித்துள்ளது

(யாழ்ப்பாணம்)

விவசாய உற்பத்திக்குழுக்கள் மூலம் உதவி அரசாங்க அதிபர்கள் மட்டத்தில் அமுலடை செய்த நெறிகாணிகளில் பயிரிடும் திட்டம் 65 வீதம் வெற்றியளித்துள்ளதாக யாழ். மேலதிக அரச அதிபர் தெரிவித்தார்.

இந்த பயிரிடும் நடவடிக்கையில் சிறு தானியங்களே உள்ளதாயினும் இவை பெரும்பாலும் விரைவாக பயிர் செய்கைப் பலாபலன் தரும் என்பதையும் விரைவில் சிறு தானிய உற்பத்தியைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

(லோ)

## ஊர்வலங்கள் மீது தடை நீக்கப்படும்

(கேப்டவுன்)

இன ஒதுக்கலை முடிவுக்குக் கொண்டு வர மேலும் சில நடவடிக்கைகளைத் தென் ஆபிரிக்க அரசு அறிவித்துள்ளது. தென் ஆபிரிக்காவில் அனுமதி பெற்ற அரசியல், மற்றும் எதிர்ப்பு ஊர்வலங்கள் மீது கடந்த 15 வருடங்களாக விதிக்கப்பட்டிருந்த தடையும் இந்த மாத இறுதிக்குள் நீக்கப்படும். அந்நாட்டின் நிதி அமைச்சர் இத் தகவலைப் பாராளுமன்றத்தில் வெளியிட்டார்.

## பாலமுரளிக்கு பத்மவிபூஷன் விருது

(டில்லி)

ராஷ்டிரபதி ஆர். வெங்கட்ராமன் பல்வேறு துறைகளில் சிறந்த பணியாற்றிய ஐம்பது பேருக்கு நேற்று விருதுகள் வழங்கிச் சிறப்பித்தார்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த பிரபல இசை மேதை கலாநிதி பாலமுரளி கிருஷ்ணாவுக்கு பத்மவிபூஷன் விருது வழங்கப்பட்டது. பாரத ரத்னா விருது வழங்கப்பட்ட முன்னாள் பிரதமர் மொராஜி தேசாயும், பத்மவிபூஷண் விருது வழங்கப்பட்ட குல்சாலி லால் நந்தாவும் விருது வழங்கும் வைபவத்தில் கலந்து கொள்ளவில்லை

## பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். நாயன்மார்கட்டு ஆயுர்வேத வைத்தியசாலை புனரமைப்புச் சபையின் பொதுக் கூட்டம் இன்று (24. 03 .1991 ) ஞாயிற்றுக் கிழமை மாலை 4-00 மணிக்கு நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் புனரமைப்புச் சபைத் தலைவர் திரு. பூ. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இரத்தானம் சம்பந்தமான விளக்கமும் இடம்பெறும்.

(24)

# குவைத்தில் பழிவாங்கப்படுவதாக பாலஸ்தீனியர்கள் புகார்

(குவைத்)
குவைத்தில் வாழும் பாலஸ்தீனியர்கள் தங்கள் மீது பழிக்குப் பழிவாங்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகப் புகார் கூறியுள்ளனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:
பல ஆண்டுகளாக அகதிகளாகக் குவைத்தில் வாழ்ந்து வரும் பாலஸ்தீனியர் தாம் ஈராக்கிற்கு ஆதரவாகச் செயற்பட்டதாகக் கூறப்படுவதை மறுக்கும் அதேசமயம், பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஈராக்கை ஆதரித்தமையினையும் சரியல்ல எனக் கூறினர்.

ஆனால் போர் முடிந்தபின்பு இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர் பிடித்து வைக்கப்பட்டதாகவும், அவர்களில் சிலர் கொடுமைப்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்தனர். குவைத்திலுள்ள பாலஸ்தீனியர்களுக்கு எதிராக அட்டூழியம் இடம்பெறுவது இராணுவ அதிகாரிகளுக்குத் தெரியும் என்று மனித உரிமை இயக்கங்கள் கூறியுள்ளன. அவசியப்பொருள்கள் வாங்குவதற்குக் கூட குவைத்தில் உள்ள பாலஸ்தீனியர் தனி வரிசையில் நிற்க வேண்டியுள்ளது. தமக்குப் பெரும் அநீதி இழைக்கப்படுவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

அதேவேளை குவைத்தில் இன்னமும் அறுநூறு எண்ணெய்க் கிணறுகள் எரிந்து கொண்டிருக்கின்றன. இவற்றை அணைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள பொறியியல் வல்லுநர்கள் குவைத் எண்ணெய்க் கிணறுகளை மீண்டும் ஒவ்வொன்றிற்கும் இரண்டு மாதம் முதல் இரண்டு ஆண்டுகள் வரை தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## பாகிஸ்தான் பிரதமர் குவைத் செல்லவுள்ளார்

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தான் பிரதமர் ஜனாப் நவாஸ் ஷெரீப் எதிர்வரும் வெள்ளியன்று குவைத் செல்லவுள்ளார். குவைத் ஈராக்கிடமிருந்து விடுவிக்கப்பட்ட பின் குவைத்திற்கு முதன் முதலாகச் செல்லும் இஸ்லாமிய நாடொன்றின் தலைவர் திரு. நவாஸ் ஷெரீப் ஆவார். குவைத் ஆக்கிரமிக்கப்படுவதற்கு முன் சுமார் 90 000 பாகிஸ்தானியர்கள் குவைத்தில் பணியாற்றி வந்தனர் என்பது கவனிக்கத்தக்கது.

## ஈராக் அமைச்சரவையை சதாம் மாற்றியமைத்தார்

(பக்தாத்)
ஈராக்கிய அமைச்சரவையில் பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாக பக்தாத் வானொலியை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஈராக் துணைப்பிரதமர் சதூன் ஹமாதி பிரதமராகவும், வெளியுறவு அமைச்சர் தாரிக் அசீஸ் துணைப்பிரதமராகவும் நியமனம் செய்யப்பட்டிருப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இந் நியமனங்களை வழங்கியிருக்கும், அதிபர் சதாம் ஹுசைன், பக்தாத்தில் முற்றுகை நிலையொன்றை ஏற்படுத்தியிருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

ஈராக்கிய படையினர்களுக்கும் குர்திஷ் கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையே வட ஈராக்கில் இடம்பெறும் சண்டையில் ஈராக் படையினர் கட்டுப்பாட்டை இழந்து வருவதாக புதிய செய்திகள் கூறுகின்றன.

இதனிடையில் பக்தாத்திலிருந்து 200 கி.மீ. தொலைவிலுள்ள சாகோ நகரைக் கைப்பற்றிய கிளர்ச்சியாளர்கள் தமது வெற்றியைக் கொண்டாடும் காட்சியை சி.என்.என் தொலைக்காட்சி நேற்று ஒளிபரப்பியது.

விடுதலைப்
இவ்வாறு கண்டிக்கு சமீபமாக செங்கடகல பகுதியில் நேற்று பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றிய சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார்.

நெடுந்தீவுப்
செல்வநாயகம் என்ற பிரஸ்தாப இளைஞரை சோதனைப் பலத்தில் வைத்து நையப்புடைத்த பின்னர் முகாமிற்கு இழுத்துச் சென்றனராம். முகாமில் அவரை தீவிர விசாரணைக்கு உட்படுத்திய பின் இரண்டு தினங்களுக்குமேலாக முகாமில் தடுத்துவைத்து தொடர்ந்தும் தமிழ்ப்படி நையப்புடைத்த பின்னர் படையினர் அவரை விடுதலை செய்துள்ளனராம். (22)

## முச்சக்கர வண்டி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ். திருக்குடும்ப கன்னியர் பாடசாலையின் இன்ரறக்ட் கழகத்தினர் சிறிலங்கா விமானப்படையின் தாக்குதலால் அங்கவீனமுற்ற பாடசாலை மாணவி ஒருவருக்கு முச்சக்கர வண்டி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

உரும்பராயைச் சேர்ந்த பசேசா (வயது 16) என்ற மாணவிக்கு வழங்கப்பட்டது.

மட்டக்களப்பில்
எரும் ரெலோகுழுவினரும் அப்பகுதிகளில் தேடுதல் நடாத்தி 14 அப்பாவி ஆண்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இவர்கள் வஞ்சிக்குடி இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்களுக்கு தற்போது என்ன நேர்ந்தது என்பது பற்றி எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

மேலும் மறுநாள் 20 ஆம் திகதி பெரிய போரதீவு முகாமில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ குழுவினரும் பெரியதீவு என்ற கிராமத்தை சுற்றி வளைத்து அப்பகுதிகளில் பதுங்கி இருந்தனர்.

இவர்கள் பதுங்கி இருந்த வீதிவழியாக வயல்களுக்குச் சென்ற அப்பாவி பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இச்சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்தார். ஏனையோரில் 6 ஆண்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களை முகாமுக்கு அழைத்துச் சென்று அங்கு வைத்து அடித்துத் துன்புறுத்தப்பட்ட பின்னர் மறுநாள் விடுதலை செய்தனர்.

மாணவர்
செய்யமுடியாது என்று திறைசேரி தெரிவித்துள்ளது.

இந்த ஒதுக்கீடு மறுப்புக்கு இம் மாவட்டத்தில் பாடசாலைகள் ஒழுங்காக நடைபெறவில்லை என்றும், மாணவர்களின் வரவு குறைவு என்றும் காரணம் கூறப்பட்டது. தற்போது 8 மில்லியன் பணமே மேற்படி உணவு முத்திரைக்கான கொடுப்பனவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

தமிழீழ மீட்பு
மீட்புநிதி செலுத்த விரும்புவோர் யாழ். மாவட்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

ஆனையிறவில்
தல் தொடுத்தனர். இந்தத் தாக்குதலினால் ஏற்பட்ட சேத விபரங்கள் எதுவும் தெரியவில்லை.

இதேவேளை முற்பகல் 11-30 மணியளவில் ஆனையிறவு உல்லாசவிடுதியில் இருந்து உப்பளம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தினர். இந்தத் தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரங்கள் எதுவும் தெரியவில்லை.

ஹெலிதாக்கி
யளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் ஆர் சத்தியலிங்கம் வயது 32 என்பவர் படுகாயமடைந்துள்ளார். வீதியால் சென்றுகொண்டிருந்த பொதுமக்கள் கூட்டம் ஒன்றின் மீதே கலிபர் தாக்குதல் நடாத்தப்பட்டது.

பொதுமக்கள் பீதியடைந்து பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினர் இந்தக் ஹெலிகொப்டர் துண்டுப் பிரசுரங்களையும் வீசியது. (க)

நயினாதீவு
நடாத்தப்பட்டது. இத் தாக்குதல்களின் போது ஏவப்பட்ட எறிகணைகளில் கடலில் வீழ்ந்து வெடித்தது ஒரு கிலவற்றைத் தவிர ஏனையவை குறிகட்டுவான்துறை, நடுத்துருத்தி வெளி ஆகிய இடங்களில் வீழ்ந்து வெடித்தன. 22)

எட்டு மாவீரர்களுக்கு
முக்கியஸ்தர்கள் உரையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து மாவீரர்களின் புகழுடல்கள் அலங்கரிக்கப்பட்ட வாகனங்களில் சுன்னாகத்தில் இருந்து கோப்பாய், தென்மராட்சி மாவீரர் மயானங்களுக்கு இராணுவ மரியாதையுடன் எடுத்துச்செல்லப்பட்டு தீயுடன் சங்கமமாக்கப்பட்டன. (மு)

மண்ணெய்
பிரச்சினையைத் தீர்க்க எந்த வகையிலும் உதவவில்லை என்றும் இனிமேல் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எடுத்து வரப்படும் மண்ணெண்ணெயின் விபரம் மற்றும் விற்பனை செய்யப்படும் இடம் என்பவை திறை செயலக உயர் அதிகாரி ஒருவர் உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்றும் கூறப்பட்டது.

மேற்படி நடைமுறையைப் பின்பற்றத் தவறும் கூட்டுறவுச் சங்கங்களின் அனுமதிப்பத்திரங்கள் இரத்துச்செய்யப்படும் என்றும் அரசாங்க அதிபர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (க)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## மக்களுக்குத் தரமான மருந்துகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
பொருளாதார ரீதியாகப் பாதிப்படைந்த எம் மக்களுக்குத் தரமான மருந்துகளை குறைந்த விலையில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கச் செயலர் சி. ஞானம் சிறிகணேசனின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது. உலகச் சந்தையில் கிடைக்கும் மருந்துகளின் தரம், விலை அறிந்து எமக்கு ஏற்றவையைப் பாவித்தல் வேண்டும் என்றும் மற்றும் மருந்து விநியோகிப்போர் தரமான பாதிக்காத வகையில் வியாபார கழிவின் ஒரு பகுதியை விட்டுக்கொடுத்துச் சில்லறை விலையைக் குறைப்பது எமது மக்களுக்குப் பயன் பொருந்துவது என்றும் அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போதைய சூழ்நிலையில் மருந்து வியாபாரம் சம்பந்தமான கஷ்டங்கள், கொள்வனவு செய்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், சீரான மருந்து விநியோகம் போன்றவை சம்பந்தமான விடயங்களை இம் மாத முடிவிற்குள் தமக்கு அறியத் தரும்படி மேற்படி சங்கம் ஆங்கில மருந்து வர்த்தகர்களைக் கேட்டுள்ளது.

## பர்மிய இராணுவம் எல்லைப் பகுதியில் குவிப்பு

(ரங்கூன்)
பர்மாவில் எல்லைப் பகுதியில் இராணுவம் தனது பலத்தை அதிகரித்து வருகின்றது. நூற்றுக்கணக்கான அகதிகள் தய்லாந்திற்குள் பிரவேசித்து வருகிறார்கள். தய்லாந்தின் எல்லைப் பகுதியில் சுமார் நாற்பதெட்டாயிரம் அகதிகள் இருப்பதாகவும், ஒவ்வொரு மாதமும் சுமார் நானூறு - ஐநூறு அகதிகள் வருவதாகவும் அங்குள்ள அகதி முகாம்களைப் பார்வையிட்ட பி.பி.ஸி. முகவர் கூறியுள்ளார்.

சிறுபான்மைக் குழுவின் கிளர்ச்சித் தலைமை அலுவலகம்மீது தாக்குதல் நடத்த இராணுவம் திட்டமிடுவதாக நம்பப்படுகிறது.

## ஈராக்கிற்கு உணவு செல்ல பாதுகாப்புச் சபை அனுமதி

(வாஷிங்டன்)
ஈராக் மீதான உணவுப்பண்டங்கள் எடுத்துச் செல்லும் தடையை நீக்கவும், மனிதாபிமானத் தேவைகளை ஈடுசெய்யவும் ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானங்களை மேற்கொண்டுள்ளது.

ஈராக்கின் தென்புலமான ஷியா முஸ்லிம் கிளர்ச்சிக்காரர் பகுதிக்கும், வடபுலமான குர்திஷ் கிளர்ச்சிக்காரர் பகுதிக்கும் நிவாரண உதவிகளை அனுப்பச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவி நாடப்பட்டுள்ளது. அதேசமயம் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அங்கத்துவ நாடுகளான பிரிட்டனும், ஜேர்மனும் குவைத்தின் ஆட்சியை மீண்டும் நிறுவுவதில் குறைந்த வசதிகளை இதுவரை செய்யப்பட்டுள்ளன; அதுபோன்று ஆசியாவிலிருக்க ஈராக் மீதான பொருளாதாரத் தடைகள் முற்றாக நீக்கப்பட வேண்டுமெனக் கோரியுள்ளன.

## ராஜ்கபூர் திரைப்பட விழா

(டில்லி)
இந்திய திரைப்பட நடிகரும் தயாரிப்பாளருமான ராஜ்கபூரை கௌரவிக்கும் பொருட்டு மொறிசியஸ் தீவின் போர்ட் லூயி நகரில் அடுத்த மாதம் 8ஆம் திகதி முதல் சிறப்புத் திரைப்பட விழா ஒன்றுக்கு ஏற்பாடாகியுள்ளது. பாரத திரைப்பட இயக்குநர்களோடு இணைந்து மொறிசியஸ் திரைப்பட அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் இந்த விழாவுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

## குர்திஷ் இனத்தவர் ஆர்ப்பாட்டம்

ஈராக் அரசையும் அதிபர் சதாம் ஹுசைனையும், கண்டித்து குர்திஷ் முஸ்லிம்கள் நேற்று புதுடில்லியில் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்தினர். பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்ட இந்த ஊர்வலம், ஈராக் தூதுவராலயத்தைக் கடந்த போது ஒரு முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

கல்வி
கூட்டத்தில் இக்கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் அஞ்சலி உரையாற்றினார்கள். சிறப்புரையாற்றிய திரு. ஆஞ்சநேயர் மேலும் குறிப்பிட்டதாவது;

இக்கல்லூரியின் பழைய மாணவர்களான இவ்வீரவேங்கைகள் வெறும் ஏட்டுப்படிப்புடன் மட்டும் நின்றுவிடவில்லை. தமது சமுதாயத்தின் எதிர்காலம் பற்றித் தெளிவாகச் சிந்தித்தார்கள். தமது மக்களின் மீட்சிக்காகவும், தாயக மண்மீட்பிற்காகவும் தமது உயிரையும் கொடுத்துப் போராடி வீரமரணமடைந்துள்ளார்கள் இவர்களுக்கு நாம் வெறுமனே அஞ்சலி செலுத்துவதுடன் மட்டும் நின்றுவிடாது நாம் அனைவரும் அவர்களின் பாதையிலேயே போராட முன்வரவேண்டும் என்றார்.

தொடர்ந்து போர்க்கால இராகங்கள் இன்னிசை நிகழ்ச்சியும், 'களத்தில் காத்தான்' சித்த நடைக் கூத்தும் இடம் பெற்றன. (மு)

## தகுந்த ஆதாரம் காட்டிப் பெறவும்

(யாழ்ப்பாணம்)
சுத்திகரிக்கப்பட்ட உணவு முத்திரைத் தொகுதியொன்று காட்டாலடிச்சந்திக்கும், ஒட்டுமடம் சந்திக்குமிடையே கண்டெடுக்கப்பட்டுள்ளது உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி ஈழநாதம் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

புனர் நிர்மாணம்
தமது இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அதிகாரிகளினால் யாழ் மாவட்டத்தில் இதுவரைமேற்கொண்ட புனர்வாழ்வுப் பணிகள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் மேலும் நிதி ஒதுக்கீடு கிடைக்குமென்று கணக்காளர் நம்பிக்கை தெரிவித்தார்.